செய்தி வெளியீடு எண்.560 நாள்.12.7.2008

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, புதிதாக பணி நியமனம் பெற்ற 543 பணிமேற்பார்வையாளர்கள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் தமிழ்நாட்டில், சென்னை தவிர இதர அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்படுவதையொட்டி இத்துறையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள 673 பணி மேற்பார்வையாளர் பணியிடங்களில், 543 இடங்களை பொறுத்து பணி நியமனம் பெற்றுள்ள பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 543 பணி மேற்பார்வையாளர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் இன்று (12.7.2008) நேரில் சந்தித்து தங்களுக்கு பணி நியமனம் வழங்கியதற்கு நன்றி தெரிவித்தனர்.

எவ்வித பாராபட்சமோ, பரிந்துரையோ இன்றி வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் பணி மேற்பார்வையாளராக நியமனம் பெற்றுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் பொறியியல் பிரிவு அலுவலர்களான இவர்கள் அனைவரும் அப்பழுக்கின்றி சிறந்த முறையில் பணி புரிய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தெரிவித்தார்.

அரசுப் பணியிடங்களில் காலியாகும் பணியிடங்களை நிரப்பிட விதிக்கப்பட்டிருந்த தடை இந்த அரசு பொறுப்பேற்றபின் நீக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்பிட துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரசுப் பணியிடங்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர் பணியிடம் உட்பட இத்துறையில் மே,2006ல் காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் 16,418 பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணி இடங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையில் காலியாக இருந்த, அலுவலக உதவியாளர் பணியிடம் தொடங்கி, ஓட்டுநர், இரவு காவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்தர், சாலை ஆய்வாளர், பணி மேற்பார்வையாளர், இளநிலை வரைதொழில் அலுவலர், உதவிப் பொறியாளர், உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள் என பல நிலையிலான காலிப் பணியிடங்கள் அனைத்தும் மிக விரைவாக நிரப்பப்பட்டுள்ளன என்றும், வளர்ச்சிப் பணிகளை துரிதமாக நிறைவேற்றவும், ஊராட்சி நிர்வாகத்தை செம்மையாக நடைமுறை படுத்தவும், இது பெரிதும் உதவியுள்ளது என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

காலிப் பணியிடங்களை நிரப்பியது மட்டுமல்லாமல் புதிதாக 32 பொறியியல் உபகோட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டு உதவி செயற் பொறியாளர் பணியிடங்களும், அதேபோல் 673 பணிமேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, அதில் இதுவரை 543 பணியிடங்களுக்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயலர் / சிறப்பு ஆணையர் திரு.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. ஆகியோரும் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**